**தேதி - 26.11.2025.**

**Pro.OP.146/2023**

**Pw.2 - திரு. அமர்நாத்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை**

நான் ஆடிட்டராக பணிபுரிந்து வருகிறேன். பிரேம்நாத் என் அண்ணன். நானும் என் அண்ணனும் ஒரே அலுவலகத்தில் ஆடிட்டராக இருந்து வருகிறோம். என் தகப்பனார் கிருஷ்ணமாச்சாரி ஆடிட்டர். எனது குடும்பத்திற்கும், எதிர்மனுதாரர் குடும்பத்திற்கும் சுமார் 50 வருட பழக்கம் உள்ளது. நானும், மனுதாரர், எதிர்மனுதாரர் அனைவரும் சௌராஸ்டிரா வகுப்பினர். டாக்டர். மகேஸ்வரனுக்கு 3 பெண் குழந்தைகள். அவர்கள் இவ்வழக்கின் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரராக உள்ளனர். மனுதாரர்களுக்கு சௌராஸ்டிரா வகுப்பைச் சேர்ந்தவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளனர். இறந்துபோன டாக்டர். மகேஸ்வரனுக்கு நானும் என் சகோதரரும் ஆடிட்டராக இருந்து வந்தோம். ம.சா.ஆ.1 உயில் எங்கள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதா என்று கேட்டால் டாக்டர்.மகேஸ்வரனே எழுதி எங்கள் அலுவலகத்திற்கு எடுத்து வந்தார். ம.சா.ஆ.1 உயிலை தயாரித்தது யார் என்று பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதில் தயாரித்தவர் என கையெழுத்து எதுவும் இல்லை. ம.சா.ஆ.1ல் முதல் பக்கத்தில் டாக்டர். மகேஸ்வரன் கையெழுத்து இல்லை. மேற்படி உயிலை எங்கள் அலுவலகத்தில் வைத்து என்னால் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் எழுத்துக்களுக்கு இடையேயான இடைவெளி சீராக இல்லை என்றால் சீராக

இல்லை. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 1, 2, 5 இலக்க சொத்துக்கள் டாக்டர். மகேஸ்வரனுக்கு அவருடைய தகப்பனார் கே.என்.வாசுதேவன் என்பவர் எழுதி வைத்த உயில் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள். வாசுதேவன் எழுதி வைத்த அந்த உயிலில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அந்த உயிலின் சான்றிட்ட ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். (அதன் அசல் மனுதாரர் வசம் இருப்பதாக எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது). அது **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாசுதேவன் ஏற்கனவே ஒரு உயில் எழுதி வைத்தார். அதில் சொத்து விபரம் குறிப்பிடப்பட்டிருந்தது. டாக்டர். மகேஸ்வரனுக்கு ஆடிட்டர் என்ற முறையில் நான் வருமான வரிகணக்குகள் தாக்கல் செய்துள்ளேன். டாக்டர். மகேஸ்வரன் இறந்துபிறகு அவர் எழுதி வைத்த உயில் ஊர்ஜிதத்திற்கு வந்ததாக எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். டாக்டர். மகேஸ்வரனுடைய மனைவி சாந்தினி 09.06.2023 ம் தேதி இறந்துவிட்டார். தாவா உயில் சம்பந்தமாக எதிர்மனுதாரரிடம் எதுவும் தெரியப்படத்தவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அவர் இறந்த உடனேயே எதிர்மனுதாரரிடம் சொல்லிவிட்டேன். ம.சா.ஆ.1 உயில் டாக்டர். மகேஸ்வரனால் எழுதி வைக்கப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தில் சமபங்கு உள்ளது என்றும் அதனை அவருக்கு தர மறுக்க வேண்டும் என்பதற்காக தாவா உயில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் டாக்டர். மகேஸ்வரன் கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று சொன்னால்

அதுபற்றி எனக்கு தெரியாது. டாக்டர். மகேஸ்வரனுக்கு வருமான வரிகணக்கு சமர்ப்பிக்கும்போது அவரிடமிருந்து பெறப்பட்ட கையெழுத்தை வைத்து ம.சா.ஆ.1 உயில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. தாவா உயில் போலியான உயில் என்று சொன்னால் அது சரியல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் அது சரியல்ல. தாவா உயில் இந்த மனுவிற்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- அமர்நாத்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.11.29 13:53:56 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.